**03.06.2024.**

**O.S. No. 158/2021**

**DW.1 – Jayakumar S/o. Raman**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் 10.02.2023 அன்று ஆஜராகி என் தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கிடை மனு 03/2023, 18.04.2024 அன்று அனுமதிக்கப்பட்டதின் பேரில் இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் தரப்பில் 26.03.2015 தேதியிட்ட உயிலை சான்றாவணமாக முன்னிடுகிறேன். மேற்படி என் தகப்பனார் ஏ.ஜி. ராமன் தாவா சொத்தை பொறுத்து 26.03.2015 அன்று எனக்கு ஏற்படுத்தி கொடுத்த உயிலினை பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மேற்படி உயில் வாதி தரப்பு ஆட்சேபணையிடையே சாட்சி ஜெயக்குமார் தரப்பில் நிருபிக்கும் தன்மைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

பி.வா.சா.ஆ.10 உயில் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த உயில் பத்திர பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்டதா என்றால், இல்லை. என் தகப்பனார் இறந்த பிறகு வீட்டில் தேடிய போது இந்த உயில் கிடைத்தது. இந்த உயில் தவறான சங்கதிகளை கொண்டு என்னால் தயாரிக்கப்பட்ட ஒன்று என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.10 என் தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

**3-ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**<u>4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA
Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.